தீர்மானத்தின் மீதான விவாதத்தில் இதைப்பற்றி பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலும், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, இராஜபாளையம் வட்டாரங்களில் பருவ மழையின்மையும் வரி தள்ளுபடி முதலியவையும்

திரு. எ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், சிவகாசி, இராஜபாளையம் வட்டாரங்களில் பருவமழை தவறியதால் வரண்டு விளைச்சல் ஏதுமின்றி பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதி விவசாய மக்களுக்கு நில வரிகளைத் தள்ளுபடி செய்யவும், கடன் வசூலிப்பதை ஒத்திப் போடவும், பழைய கடன்களை வஜா செய்யவும் வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker Sir. as early as March 1970, reports were received from several Collectors including the Collector of Ramanathapuram that owing to failure of rains in 1969 and in the first quarter of 1970, acute distress prevailed in several pockets in their respective districts. To alleviate the distress caused the Collectors recommended that the collection of Government dues might be postponed. The Government examined the question very carefully and issued orders in March 1970 authorising the Collectors to use their discretion in postponing the collection of all Government loans and land revenue dues for a period of six months in places where they are personally satisfied that owing to failure of rains, acute drought conditions prevail. This concession is available till about the end of September 1970. Under this concession, the complete waiver of long-standing loan arrears is not contemplated. However, in cases of extreme hardship where the arrears are considered irrecoverable, it is open to the Collectors to recommend to the Government for write-off of such arrears.

Grant of remission of land revenue in affected parts would certainly be considered by the Revenue officials in accordance with the Board's Standing orders. As regards special remission, the Government issued orders in April 1970 itself that remission of full wet assessment may be granted for wet lands in the areas specified by the Collector of Ramanathapuram, where the yield has been 25 paise or less except for mamool waste.

திரு. ஏ. அ. சுப்பராஜா: அமைச்சர் அவர்களுடைய பதிலிலே கலெக்டருடைய டிஸ்கிரெஷன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் குறிப்பாக கேட்க விரும்புகிறேன். கலெக்டர் டிஸ்கிரெஷன் என்றாலும்கூட, லிஸ்டு தயார் செய்து, சிபார்சு செய்து, மறுபடியும் அரசாங்கத்திற்கு வரவேண்டுமா, அல்லது அவரே செய்துவிடலாமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அவர்களே செய்துவிடலாம். அவர்களுக்கு டிஸ்கிரஷனரி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

He himself must be personally satisfied about it and he can take necessary steps in the matter.